Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஆவணி 29    (14-09-1991)    சனிக்கிழமை    ஓசை: 208

## மாமனிதர் கலைஞானியின் அரும்பொருள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் கலைஞானியின் அரும்பொருள் கண்காட்சி ஒன்று 27-09-91 வெள்ளி முதல் தொடர்ந்து பத்து நாட்களுக்கு யாழ் பல்கலைக்கழக நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆதரவில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் ஈழத்தமிழர்களின் நாகரிக வரலாற்றினைச் சித்தரிக்கின்ற பழைமை வாய்ந்ததும், பல்துறை சார்ந்ததுமான தொல்லியற் சின்னங்கள், கலை, பண்பாடு, இலக்கியம், வைத்தியம், சோதிடம், அரசியல் ஆகிய இன்னோரன்ன பலஅரிய வரலாற்றுப்பொக்கிஷங்கள் தமிழ்மக்களின் (4-ம் பக் பா.)

# சிறிலங்கா இராணுவத்திற்கு இந்தியா மறைமுக உதவி

## வரைபடங்கள், ஆலோசனைகள் வழங்கியது

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினரின் தற்போதைய மணலாற்று இராணுவ நடவடிக்கைக்கு இந்தியாவின் மறைமுக ஆதரவும், இராணுவ உதவியும் கிடைத்துவருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் ஒரு பிரதேசம் இருக்கக் கூடாது என்பதே இந்தியாவின் எண்ணமாக வுள்ளதாம் எனவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் ஒருபிரதேசம் இருப்பதை விரும்பாத இந்தியா சிறிலங்கா இராணுவத்திற்குத் தேவையான வரைபடங்கள், ஆலோசனைகள் மற்றும் தகவல்களையும்வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது இவ்வரைபடங்களும், தகவல்களும் இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்த போது பெறப்பட்டவையாகும்.

மேலும் இந்திய அதிகாரிகள் சிறிலங்கா இராணுவத்துடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருப்பதாகவும், சிறிலங்கா தரப்பில் கேணல் அகங்கம இவ் விடயத்தை கையாள்வதாகவும் கூறப்படுகின்றது. இவர் ஊடாகவே இந்தியா இவ் உதவிகளைச் செய்து வருவதாகவும் அறியவருகின்றது. ஆனையிறவுப் போரின் போதும் ஆலோசனைகள் பெறப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன;

அதேவேளை மணலாற்றுப் பகுதியில் பதின் நான்கு புலிக

## கொழும்பில் சார்க் மாநாடு திட்டமிட்டபடி நடக்கும்

### - பிரெட்மன்

(கொழும்பு)

சார்க் உச்சி மாநாடு வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக சர்வதேச விவகாரங்களுக்கான சிறிலங்கா ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்

சிறிலங்காவில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிராக கண்டனத் தீர்மானம் எடுக்கப்பட்டு அரசியல் சட்ட பிரச்சினைகள் எழுந்துள்ள போது சார்க் உச்சி மாநாட்டை திட்டமிட்டபடி நடத்த முடியும் என்று தாம் நம்புவதாக பிரெட்மன் தெரிவித்தார்.

## சிறிலங்கா ஆசிரியர் சேவை அமுலுக்கு வருமா?

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தமது பதவியை ராஜினாமாசெய்ததால் அவர் அமுலுக்குக் கொண்டு வருவதாக திட்டமிட்டிருந்த 'சிறிலங்காஆசிரியர்சேவை' என்ற திட்டம் அமுலுக்கு வருமா? என்பது குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தத் திட்டம் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் ஆசிரியர் தினத்துடன் ஆரம்பிப்பதாக திட்டமிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## புலிகள் ஆதரவாளர் மேலும் நால்வர் கைது

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக மதுரையில் நடைபெற்ற மாநாடு தொடர்பாக மேலும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த மாநாடு தொடர்பாக மொத்தம் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் புலிகள் ஆதரவுத் துண்டுப் பிரசுரம்

(சென்னை)

புலிகளுக்கு ஆதரவாக தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும். அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா மீளவும் எச்சரித்துள்ளார்.

இன்று சட்டப் பேரவையில் கேள்வி நேரம் முடிந்தவுடன் சென்னையில் மக்கள் உரிமைக் கழகத்தின் சார்பில் (4ஆம் பக்கம் பார்க்க)

## நாடக, சிற்பக் கல்லூரிகள் பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழாப் பிரகடனத்துக்கு அமைவாக அக்கழகம் உருவாக்க உள்ள "தமிழீழ நாடகக் கல்லூரி", "தமிழீழ சிற்ப சித்திரக் கல்லூரி" என்பனபற்றி கலந்துரையாடல்கள் நடாத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 18ஆம் திகதி (4ஆம் பக்கம் பார்க்க)

# மணலாறில் கைகலத்தம் நிலையில்

மேலும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தமிழக பொலிசார் தெரிவித்துள்ள

பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

மற்றும் தகவல்களையும்வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது இவ்வரைபடங்களும், தக

நேரடித் தொடர்புகளைக் கொண்டிருப்பதாகவும், சிறிலங்கா தரப்பில் கேணல் அகங்

போதும் ஆலோசனைகள் பெறப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை மணலாற்றுப் பகுதியில் பதின் நான்கு புலிகளின் தளங்கள் இருப்பதாக தமக்குக் கிடைத்த புலனாய்வு அறிக்கைகளில் தெரிவித்திருப்பது தவறு எனவும், அதைவிடக் குறைவான முகாம்களே உள்ளன எனவும் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த கேணல் சரத் முனசிங்க தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழாப் பிரகடனத்துக்கு அமைவாக அக்கழகம் உருவாக்க உள்ள "தமிழீழ நாட

பனபற்றி கலந்துரையாடல்கள் நடாத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 18ஆம் திகதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# மணலாறில் கைகலக்கும் நிலையில்

# புலிகள் - இராணுவம் கடும்மோதல்

(மணலாறு)

மணலாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றது. மிக அண்மையில் நின்று இரு பகுதியினரும் மோதிக்கொண்டனர். இம் மோதலில் இராணுவத் தரப்பில் பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. புலிகள் தரப்பில் பதின்மூன்று வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

கடந்த மாதம் இருபத்தொன்பதாம் திகதி மணலாற்றுப் பகுதியில் மோதல் ஆரம்பித்த பின்னர் ஏற்பட்ட முக்கிய மோதல்களில் ஒன்றாக நேற்று நடந்த மோதல் தெரிவிக்கப்படுகின்றது

மிகக் குறுகிய இடைத்தூரத்தில் நின்று இருவரும் மோதிக் கொண்டனர். கைகலப்பு நிலை உருவாகியதாகவும் தெரிய வருகிறது நேற்றுக் காலையில் இருந்துஇரவு வரை ஏற்பட்ட இம் மோதலின் போது சிறிலங்கா விமானப் படை தொடர்ந்து குண்டுமாரி பொழிந்ததாகவும் ஆனால் புலிகளின் கடுமையானதாக்குதல் களினால் இராணுவத்தின் முன்னேறும் முயற்சி முறியடிக்கப்பட்டது

இம் மோதலைப் பற்றிச் செய்திவெளியிட்ட சிறிலங்கா இராணுவத்தரப்பு இரு பகுதியினருக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்றதாகவும், அதில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பதினெட்டு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் தெரிவித்தது.

## நித்திகைக்குள மோதலில் 13 புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

நித்திகைக்குளத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த பதின்மூன்று போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். வீரமரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு:

★ பாலு (சாமித்தம்பி தியாகராசா காத்தான்குடி. மட்டக்களப்பு),

★ விசு (சாந்தன் அன்ரன் மாலிகைத்திடல் திருக்கேதீஸ்வரம்),

★ மாலினி (வாசுகி சிவானந்தன் 3ஆம் வட்டாரம், முள்ளியவளை),

★ லியா (நந்தினி தர்மலிங்கம் கரணவாய் தெற்கு கரவெட்டி),

★ ஏஞ்சல் (செல்வி சுப்பிரமணியம், ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்)

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ தரப்பில் பலத்த சேதம்

### அம்புலன்ஸ் ஓட்டம் அதிகரிப்பு

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்தில் புலிகளுடன் தொடர்ந்துநடைபெற்றுவரும் மோதலில் இராணுவத்தினருக்குப்பலத்தஇழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும், பெரியளவில்இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் பி. பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது. காயமடைந்த இராணுவ வீரரை ஏற்றிய அம்புலன்ஸ் வண்டிகள் கொழும்பு விமான நிலையத்தில் இருந்து ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி செல்வதாகவும் மேலும் தெரிவித்தது

மேலும் கடந்த இரு தினங்களில் நிகழ்ந்த மோதலில் மட்டும் 80இராணுவத்தினர்வரை கொல்லப்பட்டோ அன்றி காயமடைந்தோ உள்ளதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி.பி.ஸி தெரிவித்தது.

அதே வேளை இருவார மோதலில் இதுவரை ஆறு அதிகாரிகள் உட்பட 52 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 62 பேர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்களை

(4ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டு வீச்சால் 2000 குடும் இடம்பெயர்வு

(மணலாறு)

செம்மலை, அலம்பில், குமுளமுனை ஆகிய இடங்களில் கடுமையான விமானத்தாக்குதல்களை சிறிலங்காப் படைகள் நடத்துவதால் அப்பகுதியிலிருந்து சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் வரையில் இடம்பெயர்ந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இந்தக்கிராமங்களில்கோயில்கள் பாடசாலைகள் உட்பட பொதுமக்களின் வாழ்விடங்களும் ஏராளமாகச் சேதமாகிப் போயுள்ளன. இடம்பெயர்ந்து வாழ வழியற்று நிர்க்கதியான மக்கள் உணவு வசதியின்றி பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தக் கிராமங்களில் இடை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பொருள் கடத்தல் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளை 32 இல் கடத்தப்பட்ட நிவாரணத்திற்குரிய மா கிளைக்குழுவின் உதவியுடன் பிடிபட்டது.

இந்த மாக்கடத்தலுக்கும் ஒரு கிராமசேவையாளருக்கும் சம்பந்தமிருப்பதாக விசாரணையிலிருந்து அறியப்படுகிறது.

மேற்படி விடயம் சம்பந்தமாக கிளை முகாமையாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# சபாநாயகரின் ஆதரவு பிரேமாவிற்கு இல்லையாம்

(கொழும்பு)

சபாநாயகர் எம். எச் எம். முகம்மது சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு ஆதரவாகச் செயற்படவில்லை என்று கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. தற்போது நுவரெலியாவில் சென்று தங்கியிருக்கும் சபாநாயகர் பாராளுமன்றம் இருபத்துநான்காம் திகதி கூடும்போது எத்தகையநிலையைக் கடைப்பிடிப்பார் என்பது இன்னமும் தெளிவாக இல்லை.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மீதான குற்றப் பிரேரணைமீது பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழ் இரகசிய வாக்கெடுப்பு நடத்த சட்ட விதிகள் இடமளிக்காத போதும் நிலையியற் கட்டளைகளை ஒத்திவைக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு அரசியல் அமைப்பின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது இதனைப் பயன்படுத்தி சபாநாயகர் இரகசிய வாக்கெடுப்புக்கு உத்தரவிட்டால் குற்றப் பிரேரணை மீதான விவாதத்தில் அதிருப்தியாளர்கள் வெற்றி பெறக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

குற்றப் பிரேரணையில் கையெழுத்திட்டவர்களில் 43 பேர் ஐ. தே. கட்சியைச் சார்ந்தவர்களே என்றும், இவர்களில் எட்டுப்பேர் மட்டுமே தற்போது இனங்காணப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் குண்டுவீச்சு

மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தரவை என்னும் இடத்தில் சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் பலத்த குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

நேற்றுக் காலை பத்து மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் பல குண்டுகள் வீசப்பட்டபோதிலும் சேதம் எதுவும் ஏற்படவில்லை

## சுயேட்சைகளின் பாராளு. இடத்தை நிரப்ப கொழும்பில் சிலர் முயற்சி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் போட்டியிட்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற சுயேட்சைக் குழுவைச்சேர்ந்த பன்னிரண்டு பாராளுமன்ற இடங்களையும் நிரப்ப கொழும்பில் சிலர் முயற்சி எடுப்பதாகத் தெரிய வருகின்றது

இது தொடர்பாக இந்த அமைப்பைச் சேர்ந்த சிலர் வெளிநாட்டிலிருந்து அண்மையில் கொழும்புக்கு வந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஓராண்டு நினைவலைகள்



2ஆம் லெப்டினன்ட் ரகுபதி
(மரியதாஸ்யூட் அமல்ராஜ்)

தமிழ்த்தாய் மடியில் 30 - 08 - 73 தமிழர்தம் நெஞ்சங்களில் 14 - 09 - 90

விடுதலை வேட்கை கொண்ட வீரனாக
அடிமை விலங்கொடிக்கப் புறப்பட்டாய்
பாதிவழியில் உத்தன் பயணந்தனை முடித்தாய்
மீதிவழிச்செம்மை மீளாத் துயரிலிட்டாய்
சுதந்திரத் தமிழ் மண்ணின்
நிரந்தர விடிவு நாளில்
எம்முகம் சிந்திடும் புன்னகை
உன் ஆன்மாவை அமைதி செய்யட்டும்

பெற்றோர், உடன்பிறப்புக்கள்

உயிலங்குளம் (R/1738)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மின் மடியில் 24 - 08 - 1975



ஆனையிறவு மண்ணில் 01 - 08 - 1991

வீரவேங்கை அசோக்
(கதிர்காமநாதன் ரகுநாதன்-ரவி)
01-08 1991 இல் ஆனையிறவில் இலங்கை இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்தவர்

பால்மணம் மாறாத பாலகா நீயும்
பாயும் புலியாக மாறினாய்
பல வீரரை மண்ணிலே வீழ்த்தினாய் நீயும்
வீரப்புலியாய் விளையாடினாய்
ஆனையிறவினை மீட்பதற்கே நீ
அல்லும் பகலும் போராடினாய்
அங்கே அந்நியர் உயிர் பல போக்கினாய்
எங்கள் அசோக் நீயும் மாவீரன் ஆனாய்

01.08 91 அன்று அசோக்குடன் வீரமரண மடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள் உரித்தாகுக.

உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(B/3104)

## பட்டப்படிப்புகள் கல்லூரி

### புதியமாணவர்களை அனுமதித்தல்

**1991/1992**

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப்பட்டப் பாடநெறிகளுக்கான விரிவுரைகள் 28 9-91ல்

**ஆரம்பமாகவுள்ளன**

க பொ. த உயர்தரம் 3பாடங்களில் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

★ கலைமுதற் தேர்வு G. A. Q.
★ வணிகமுதற் தேர்வு FIRST IN COMMERCE
★ விஞ்ஞானமுதற் தேர்வுG.S.Q. (புள்ளி விபரவியல்)

பேராதனைப் பல்கலைக்கழகவிரிவுரைகள் யாவும் பின்வரும் முகவரியில் நடைபெறும்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
57/48 ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரைகள் யாவும் பின்வரும் முகவரியில் நடைபெறும்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் கடந்த 14 வருடங்களாக பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கி வரும் ஒரேயொரு நிறுவனம்.

(B/3091)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

பத்மஸ்தன் 219 நாவலர் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த க. விமலச்சந்திரன் என்பவருடைய அடையாள அட்டை கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்படிவிலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(R/ 1742)

5/1 ஆனந்தன் வடலி 30-ம் ஒழுங்கை கொழும்புத்துறையைச் சேர்ந்த ந. வன்னியசிங்கம் என்பவருடைய அடையாள அட்டை (இல. 492460346 V), பாஸ், Job Card என்பன 08-09-1991 அன்று கேரதீவு சங்குப்பிட்டி இறங்கு துறையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும்.

(R/1741)

**'பூபாளம்'**

பக்கத்து வீட்டுப்
பரமுவின் மகன்
நிக்கெட்டா இடத்திற்கு
வேலை தேடிப்
போகயிலே ...... நீ
நாளைய விடிவுக்கு
நமது மண்ணில்
பூபாளம் பாட ...
புறப்பட்டுப் போனாய்!

— வாஞ்சிநாதன்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



## 47ஆம் நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்



நினைவு ...





தாயின் மடியில் 17 - 09 - 1967 தாயகமண்ணில் 13 - 09 - 1990

## கப்டன் அஞ்சனா

(பொன்னம்பலம் கோணேஸ்வரி)

உதடுகளில் புன்சிரிப்பும்
உயர்ந்த உன் தோற்றமும்
துணிவான உன் நடையும்
கனிவான உன் பேச்சும்
உதயத்திலும் உச்சியிலும் அந்தியிலும் எம்
இதயத்தில் அகல மறுக்கின்றதே-அஞ்சனா
தாயகத்தின் விடிவிற்காய்
தாயன்பைத் துறந்து
தியாகத்தின் எல்லைக்குச் சென்று
விட்ட தியாகியே
கோட்டையிலே கொடி பறக்க
கோமகளே நீயும் மறைந்தாயே
ஆண்டொன்று ஆனாலும்
ஆறுமா எம் துயரம்

இவருடன் மரணித்த அனைத்துப் போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 798, அன்சார் வீதி, வட்டக்கச்சி.

பெற்றோர் சகோதரர் பிரதேசமக்கள்

முன்னாள் வி. உ. குழு இணைப்பாளர் விஜயரட்ணம்

(R-1787)



## வீரவேங்கை கம்பன்

(நா. கனகராஜா சத்தியகுமார், சக்தி)

தாயின் மடியில் 28-04-1973 தாயக மீட்பில் 30-07-1991

"சத்தியப் போரில் நீ கலந்தாய்
தமிழ் மக்கள் நலம் வேண்டி பலியானாய்
சரித்திரத்தில் நீ ஒரு சத்தியகுமார்
தமிழ் சந்ததிக்கெல்லாம் நீயொரு வரலாறு
ஆறாமல் நோவிருந்த போதும் சத்தி நீ
அயராது வெற்றிலைக் கேணிசென்றாய்
சென்றவன் நீ மீண்டுவரவில்லை சத்தி
உன் உடல் தன்னும் காணவில்லை
அண்ணா அண்ணா என அலறும் தங்கை
கண்ணீர் ஆறாக கலங்கும் அன்னை
எதுவும் புரியாத சின்னத் தம்பிகள்
புரிந்தும் கலங்குகின்ற அன்புத் தந்தை
உன்னை என்று நாம் காண்போம் எனத்
- துடிக்கின்றனர்.

(30-07-91 வெற்றிலைக்கேணி மோதலில் வீரமரணமடைந்த சக போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்)

14-09-91 அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் இயக்க நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
சித்தப்பா குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

காஞ்சிபுரம் வீதி,
மாதகல்.

(B/3108)

## நினைவு கூருகின்றோம்...



1991 - 09 - 14

ஸ்ரீராம்

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் கூனித்தீவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

**லோகிதன்** (கணபதிப்பிள்ளை யோகராசா - தம்பலகாமம்)

1989 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

**சண்** (சின்னத்தம்பி புண்ணியமூர்த்தி - கிளிநொச்சி)

இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளுடனான மோதலில் காய முற்று வைத்தியத்திற்காக தமிழகம் செல்லும் வழியில் வீரமரணமடைந்த

**கப்டன் ரங்கன்** (இ. ரங்கநாதன் - காரைநகர்)

விசுவமடுவில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

**2 ஆம் லெப். கிளியன்** (இ. நடனகுமார் - கிளிநொச்சி)

1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரண மெய்திய

**ஸ்ரீராம்** (சபாரத்தினதேசிகர் நந்தகுமார் - சாம்பல்தீவு, திருமலை)

தலைமன்னார் சிறிலங்கா கடற்படைமுகாம் மீதான தாக்குதலில் வீரமரண மெய்திய

**2 ஆம் லெப். ரகுபதி | ராஜன்** (மரியதாஸ்யூட் அமல்ராஜ் - மலைக் குளம், உயிலங்குளம்)

**2 ஆம் லெப். நவாஸ் | சீலன்** (அகஸ்ரின் அந்தோனிமுத்து சகாய சீலன் - முருங்கன்பிட்டி, மன்னார்)

**ரவி | அன்ரனி** (யேசுதாசன் ஜெயம் அன்ரனிதாஸ் - மருத்துவமனை வீதி, மன்னார்)

மன்னார், சிலாவத்துறைப் பகுதியில் வயலில் வேலை செய்துகொண்டிருக்கையில் சிறிலங்காப் படையினர் உலங்குவானூர்தியின் தாக்குதலினால் உயிரிழந்த 10 தமிழ் விவசாயிகள்.

சாவகச்சேரியில் உலங்குவானூர்தியின் தாக்குதலினால் உயிரிழந்த தமிழ் விவசாயி

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/3106)

" சிந்தனைக்கு "

அடக்குமுறையை அனுமதிப்பவனும்,
அந்த அநீதியில் பங்கு கொள்கிறான்.

டார்வின் எராஸ்மஸ்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 14-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 625-2839 நிர்வாகபீடம் 3800

# ஜெயலலிதா தமிழகத்தை எங்கே இட்டுச் செல்கிறார்?


தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிற்கு தமிழகத்தை எங்கே இட்டுச் செல்கின்றேன் என்பது அவருக்குப் புரியவில்லை. அமைதியாக இருந்த தமிழகத்தை தமது தேர்தல் நன்மைக்காக ஒரு வன்முறைக்களமாக சித்தரிக்க முற்பட்ட செல்வி ஜெயலலிதாவும், அவரது நண்பரான தமிழ் நாட்டு காங்கிரஸ் கிளைத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் தேர்தல் முடிந்த பின்னரும் தமது போக்கைத் தொடர்வதாகவே தெரிகின்றது.

அரசியலில் என்றும் பதற்றமான ஓர் சூழ்நிலையைப் பேண முற்பட்டு நிற்கும் செல்வி ஜெயலலிதா இறுதியில் அதற்கே அடிபட்டுப்போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தி.மு.க. தலைவர் கருணாநிதியின் ஆட்சியை எவ்வாறு காரணம் காட்டி சந்திரசேகர் அமைச்சரவை கலைத்ததோ அதேபோன்று ஏற்படும் அரசியல் சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ப செல்வி ஜெயலலிதா அரசாங்கம் கலைக்கப்படாது என்பதற்கு உத்தரவாதம் எதுவுமில்லை. இதற்கான காரணத்தை ஜெயலலிதாவே வழங்குவார்போல் தெரிகின்றது. இந்தியாவில் பெரும்பான்மை பலம் கொண்ட மாநில அரசுகள் கலைக்கப்படுவதும், அதன் அனுபவத்தை தமிழகம் பெறுவதும் இனிமேல் தான் நடக்கவேண்டிய ஒரு புது விவகாரம் அல்ல.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் தமிழக மக்களின் அடிப்படை உரிமைகளை செல்வி ஜெயலலிதா தடைசெய்ய முற்பட்டுள்ளார். புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றன என்று கூறி ஜனநாயக ரீதியான அமைப்புக்கள் ஜனநாயக ரீதியான போராட்டங்கள் என்பனவற்றைத் தடை செய்வதன் மூலம் அதற்கான தூண்டுகோலாக செல்வி ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. தமது இன மக்கள் அண்டை நாடு ஒன்றில் அடக்கப்படும்போது, அல்லது அடைக்கலம் தேடி வந்த தமிழின மக்கள் துன்புறும் போது அதற்காக குரல் கொடுப்பதும், ஆதரவு அளிப்பதும் இயற்கையானதொன்றே. இதனைத் தடை செய்வது என்பது அவர்களின் உரிமைக்கும், உணர்ச்சிக்கும் கட்டுப்பாடு விதிப்பதாகும்.

இந்நிலையில் இலங்கைத் தமிழருக்காகவோ அன்றி

# " நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆரின் நீண்ட நாள் திட்டம் "



1978 ஆம் ஆண்டு சிறீலங்கா யாப்பு பற்றி முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா கொழும்பு ஹை. எம். சீ. ஏயின் ஜூலை 8ஆம் திகதி நிகழ்த்திய உரையின் தமிழாக்கத்தின் நேற்றைய தொடர்ச்சி

**மக்களால் மக்களுக்கான ஆட்சி:**

அதிகாரம் 1, பிரிவு 3, மக்களின் இறைமையைப் பிரகடனப்படுத்துகிறது. பிரிவு 4 மக்களின் இறைமை எவ்வாறு செயற்படுகிறது என்பதை வெளியிடுகிறது (அ) பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாலும், ஒப்பங்கோடலாலும் (பொதுசன வாக்கெடுப்பு) நிறைவேற்றப் படுகின்றன. (ஆ) மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியிடம் நிறைவேற்று அதிகாரங்கள் அமையும் (இ) பாராளுமன்றத்தின் நீதித்துறை அதிகாரங்கள் நீதிமன்றங்களின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. நீதிமன்றங்கள் யாப்பு அல்லது சட்டத்துக்கமைய உருவாக்கப்படுகின்றன. இப் பிரிவு வாக்குரிமை, அடிப்படை உரிமை ஆகியவற்றையும் கொண்டது.

அமைச்சரவை ஜனாதிபதியைத் தலைவராகவும், மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவு செய்து நியமிக்கப்பட்ட பிரதம அமைச்சரையும், ஏனைய அமைச்சர்களையும்கொண்டதாகஇருக்கும்

மக்களிடம் ஒப்பம் கேடாமலும் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைவாக்குகளைப் பெறாமலும் மக்களின்இறைமை மற்றும் சில அடிப்படை உரிமைகள் தொடர்பான ஷரத்துக்களை அரசியல்யாப்பில்மாற்ற

காலம் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்று நிறைவேற்றப்பட்டது உ-ம் 1975. சுதந்திரம் பெறுவதற்கு முன் நிலையில் கட்டளை மூலம் பாராளுமன்ற ஆயுட்காலம் நீடிக்கப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியிடம் அளிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தை நடத்துவது அமைச்சரவையில் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதியின் கடமையாகும். அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்குப் பொறுப்பானவர்.

அமைச்சர்களினது நிறைவேற்று அதிகாரங்களைப் பற்றிய பிரிவை ஆராயும்போது பல ஆச்சரியமான வினாக்கள் எழும்பலாம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பிரதிநிதிகள் என்பதையிட்டு அமைச்சர்கள் நிறைவேற்று அதிகாரங்களைப்பெற்றுள்ளார்களா? யாப்பினால் பிரிவு 41 (1) இன் கீழ் அமைச்சர்களுக்கு அரசாங்கத்தை நடத்தும் அதிகாரம் கொடுக்கப்படவில்லையா? — இந்த வினாக்களுக்கான விளக்கத்தை நான் அரசியல்சட்டத்துறை சார்ந்த நிபுணர்களின் கைக்கு விட்டு விடுகிறேன்.

மக்களின் இறைமை பற்றி தீர்மானிக்கும் போது நீதித்துறையின் சுதந்திரம் மிக முக்கியம். நீதித்துறை மக்களின் நீதி அதிகாரத்தைச் செயற்படுத்துகிறது என்பது யாப்பில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் உருவாக்கப்படும் நீதிமன்றங்கள், விசாரணை மன்றங்கள் மூலம் நீதித்துறை நீதி நிர்வாகத்தைச் செயற்

ஒன்று பாராளுமன்றத்தில் மூன்றில் இருபங்கு வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டு, அது பற்றி ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டால் மாத்திரமே அவர்களால் பதவி நீக்கலாம். நீதிபதிகளின் சம்பளமும் பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன. அவர்களுடைய சம்பளம் குறைக்கப்படலாகாது. மேல் நீதிமன்ற நீதிபதிகளும் (High Court) ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றார்கள். மேல்நீதிமன்றநீதிபதிகள்மேல் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதிக்கு நீதிசேவை ஆணைக்குழு விதந்துரைக்க வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு பிரதம நீதியரசரையும் மற்றும் இரு நீதிபதிகளையும் ஜனாதிபதி தன் கைப்பட நியமிப்பார். ஏனைய நீதிபதிகளை நீதிச்சேவை ஆணைக்குழு நியமிக்கின்றது நீதிச்சேவை ஆணைக்குழுவே ஏனைய நீதிபதிகள் மீதுஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்

1978ஆம் ஆண்டு குடியரசு யாப்பின் பிரகாரம் நீதிச்சேவையில் சாதாரண நியமனங்கள் அமைச்சரவையினால் வழங்கப்படுகிறது நீதித்துறையினைப் பாதுகாக்கும் வகையில் ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு இந்த யாப்பு மனிதாபிமானத்துடன் முயற்சிக்கிறது. மிகுதி நீதிபதிகளிடமே கையளிக்கப்பட்டுள்ளது. இதற்கு நீதிபதிகள் துணிவும், ஞானமும் உள்ளவர்களாகஇருக்கவேண்டும்.

யாப்பின் ஏனைய பிரிவுகளில் பௌத்தம், மொழி, பிரஜா உரிமை. உயர்நீதிமன்றங்கள், பாராளுமன்ற ஆணையாளர், அவசரகாலச்சட்டம் ஆகியவை பற்றியதாகும்.

அடிப்படை உரிமைகளைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்தலாம். இதற்கான நடைமுறைகள் யாப்பில் தரப்பட்டுள்ளன.

பொதுசன பாதுகாப்புச் சட்டத்துக்குஅமையச் சட்டங்களைத் திருத்தவும், இடைநிறுத்தி வைக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எப்படியாயினும் அரசியல் யாப்பில் மாற்றங்களைக்கொண்டு வர முடியாது அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தலாம். பிரகடனப்படுத்திப் பதினான்கு நாட்களுக்கிடையில் பாராளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தி அதன் ஒப்புதலைப் பெறவேண்டும்.

அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துவதற்கும் அமுல்படுத்துவதற்கும் முதலாவது யாப்புகளில பாராளுமன்றத்தின் அனுமதி அவசியமில்லை.

ஜனநாயக ஆட்சிக்கு வழிகோலும் பலகட்சி முறையை வளர்க்க உதவும் வகையில் அனைத்துப் பிரஜைகளுக்கும் பேச்சுச் சுதந்திரம், வெளியீட்டுச் சுதந்திரம், கூட்டம் கூடும் உரிமை' ஆகிய உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. யாப்பின் பிரிவு 14 (1) இதனை உறுதிசெய்கிறது.

**மக்களுக்கான ஆட்சி**

மக்களுக்கான ஆட்சி என்ற எண்ணக்கருவும் கைவிடப்படவில்லை அதிகாரம் vi. பிரிவுகள் 27 - 29 வரை இதற்கான விளக்கம் தனித் தனியாகத் தரப்படுகின்றது. நான் பிரிவு:27 (2)ஐ மாத்திரம்உதாரணம் காட்டவிரும்புகிறேன். சமூக பொருளாதாரக் கொள்கைகளை முழுமையாகச் செயற்படுத்த வேண்டுமானால் நாட்டில் சமாதானமும், சுபிட்சமும் நிலவவேண்டும். பலாத்காரம் அதற்கு ஒரு தடையாகவே உள்ளது.

ஜூன் 1960—1964 வரையும் 1970 - 1971 வரையும் கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களைப் பயன்படுத்தும் அர

போது அதற்காக குரல் கொடுப்பதும், ஆதரவு அளிப்பதும் இயற்கையானதொன்றே. இதனைத் தடை செய்வது என்பது அவர்களின் உரிமைக்கும், உணர்ச்சிக்கும் கட்டுப்பாடு விதிப்பதாகும்.

இந்நிலையில் இலங்கைத் தமிழருக்காகவோ அன்றி புலிகளுக்காகவோ அல்லாமல் தமது உரிமைகள் மறுக்கப்படுவது தொடர்பாகவே போராட்டங்கள் வெடிக்கும். மக்களின் அடக்குமுறைக்கெதிரான போராட்டங்களை மோசமான சட்டங்கள் மூலமோ, அன்றி ஆயுதப்படையின் உதவியுடனோ அடக்க முடியாது என்பதை செல்வி ஜெயலலிதா அனுபவ வாயிலாக உணராவிடினும் உலகின் தற்கால நிகழ்வுகளை அவதானித்து புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழகத்தில் தேசியபந்தோபஸ்து சட்டத்தை அமுலாக்குவதன் மூலம் தமிழகத்தை ஏதோ வன்முறை மலிந்துவிட்ட மாநிலமாகக் காட்ட செல்வி ஜெயலலிதா முயல்கின்றார். இதன் மூலம் அமைதியாக இருக்கும் தமிழகத்தில் வன்முறைகளும், குழப்பங்களும், இரகசிய நடவடிக்கைகளும் தொடர்வதற்கு ஜெயலலிதா காரணமாகிறார்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தை மாநிலத்தில் அமுலாக்குவது என்பது சுலபமான காரியமாக இருக்கலாம். ஆனால். அச்சட்டத்தை பின்பு மீளப் பெறுவதும் அதிலிருந்து விடுபடுவதும் இலகுவான காரியமல்ல பஞ்சாபிலும், காஷ்மீரிலும் நிகழ்பவற்றைக் கொண்டே அதனை விளங்கிக் கொள்ளலாம். 'ஜனநாயக நாடுகளில்'' அகிம்சைப் போராட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டு அவை ஆட்சியாளர்களினால் அடக்கி ஒடுக்கப்படும் போதே வன்முறைப் போராட்டங்கள் தோன்றுகின்றன. இரகசிய நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன.

மேலும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை தனது மாநிலத்தில் அறிமுகமாக்குவதன் மூலம் சட்டம் ஒழுங்கு சீர்கெட்ட பதற்றம் நிறைந்த மாநிலம் என தனது மாநிலத்தை முதல்வரே பகிரங்கப்படுத்துவதாகும். இதனை அனுபவம் மிக்க இந்திய அரசியல் தலைவர்களும் செய்யமாட்டார்கள். தினமும் வன்முறை நிகழும் பீகாரிலோ, ஒரிஸாவிலோ எவரும் தேசிய பந்தோபஸ்து சட்டத்தை அமுலாக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், பின்னர் இதையே காரணமாக வைத்து மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு நெருக்கடியைக் கொடுக்க முடியும். இதனைச் சாட்டாக வைத்து ஆட்சியைக் கூடக் கலைக்கலாம்.

அரசியலில் நிரந்தர நண்பன் நிரந்தர எதிரி என எவரும் கிடையாது. ஏறி வந்த ஏணியை எட்டி உதைப்பதும், தான் விரித்த வலையில் தானே சிக்குவதும் சாதாரண விடயங்கள். இதனை இன்றைய தமிழக முதல்வர் புரிந்து கொள்வது அவசியமாகும். இல்லையேல் தனது தற்கால நடவடிக்கைக்காக அவரே எதிர்காலத்தில் வருந்தவேண்டி வரலாம்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைவாக்குகளைப் பெறாமலும் மக்களின் இறைமை மற்றும் சில அடிப்படை உரிமைகள் தொடர்பான ஷரத்துக்களை அரசியல்யாப்பில்மாற்ற முடியாது.

உலகில் வேறெந்த ஜனநாயக நாட்டிலும் பாராளுமன்றம் இவ்வகையான ஒப்பங்கோடல் அதிகாரத்தை மக்களுக்கு வழங்கியதாக இல்லை. இந்த ஒப்பங்கோடலுக்கு அமையத்தான் 1977-ல் தெரிவான பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் மேலும் ஆறு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது. முன்பெல்லாம் பாராளுமன்றத்தின் ஆயுட்

டப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் உருவாக்கப்படும் நீதிமன்றங்கள், விசாரணை மன்றங்கள் மூலம் நீதித்துறை நீதிநிருவாகத்தைச் செயற்படுத்துகிறது 107 முதல் 117 வரையிலான பிரிவுகள் வழிகளில் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளாகும்.

அடிப்படை உரிமைகள்:

உச்சநீதி மன்றம், மேன்முறையீட்டுமன்றம் என்பனவற்றின் நீதிபதிகள் அனைவருமே ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகிறார்கள். நீதிபதிகளைப் பதவி விலக்குவதாயின், அது தொடர்பான பிரேரணை

பேணத்தும், மொழி, பிரஜா உரிமை, உயர்நீதிமன்றங்கள், பாராளுமன்ற ஆணையாளர், அவசரகாலச்சட்டம் ஆகியவை பற்றியதாகும்.

''மக்களால் மக்களுக்கான ஆட்சி'' என்பது உறுதிப்படுத்திப்பேணப்படுகிறது யாப்பில் இது தொடர்பான விதிகளில் திருத்தம் செய்வதற்கு அல்லது யாப்பிலிருந்து ஜனநாயக வழிமுறைகளில் நீக்குவதற்கு ஒப்பங்கோடல் அவசியம்.

அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தல்

தேசிய பாதுகாப்பு இன மத ஒற்றுமை, பொருளாதார காரணிகளுக்காக

ஜூன் 1960—1964 வரையும் 1970 - 1971 வரையும் கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களைப் பயன்படுத்தும் அரசாங்கங்கள் பதவியில் இருந்தன கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தைசோவியத்யூனியன்கூடத் தள்ளி வைத்து விட்டது.

தீவிரவாதம்நாட்டில் உச்சக் கட்டத்தை அடைந்து சுழல் காற்றுப் போல் வீசிய போது, 1977 - 1983 காலப் பகுதியில் கம்யூனிஸ்ட் சித்தாந்தப் பிடியிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ள ஆரம்பித்தோம்.

நன்றி: LANKA GUARDIAN

# தாஜ்மஹால் நினைவாலயம் என்பது சுத்தப் பொய்

## - கிரிராஜ் கிஷோர்

(டில்லி)

ஷாஜகான் மும்தாஜுக்குக் கட்டிய நினைவாலயமா தாஜ்மஹால்? அதெல்லாம் சுத்தப் பொய். சிவனின் அவதாரங்களில்ஒன்றான சந்திரமௌலீஸ்வரருக்குக் கட்டிய கோயில் மேலே பளிங்குக் கற்களால் கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால் என்று விஸ்வ ஹிந்துப் பரிஷத் தலைவர்களில் ஒருவரான ஆச்சார்ய கிரிராஜ் கிஷோர் கடந்த வார இறுதியில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். மரியாதையாக இதைத் திருப்பித் தந்துவிட வேண்டும் என்றும் எச்சரித்துள்ளார்.

அயோத்தியா மதுரா (வட இந்திய மதுரா), காசி ஆகிய இடங்களிலுள்ள பள்ளிவாசல்களை விட்டுத் தந்தால் தாஜ்மஹாலை விட்டுக் கொடுக்கத் தயார் என்று விஷ்வ ஹிந்துப் பரிஷத் ஒருநிபந்தனையையும் விதித்துள்ளது.

# காமன்வெல்த் மாநாட்டிற்கு சபாநாயகர் செல்வாரா?

(கொழும்பு)

பொதுநலவாய பாராளுமன்ற (காமன்வெல்த்) யூனியனின் மாநாடு எதிர்வரும் 22 ஆம் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ளது. இம்மாநாட்டிற்கு இலங்கைப்பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முஹம்மதுவும் அழைக்கப்பட்டுள்ளார்.

ஆனால் இலங்கையில் தற்போது உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிகள் காரணமாக சபாநாயகர் கலந்துகொள்ள மாட்டார் என கொழும்பில் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

# விசேட பாதுகாப்புச் சட்ட திருத்தம் நிறைவேற்றம்

(டில்லி)

விசேட பாதுகாப்புக் குழுச் சட்டத்திற்கான திருத்தமசோதாவை இந்திய லோக்சபா நிறைவேற்றியுள்ளது.

ராஜீவ் காந்தி குடும்பத்தினர்க்கு ஆபத்து இருப்பதைக் கருதி அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட பிரதம மந்திரி அல்லது முன்னாள் பிரதம மந்திரியின் நெருங்கிய குடும்பத்தினர்க்கு சிறப்புப் பாதுகாப்பு அளிக்க இது வகை செய்கின்றது என்றும்;

பதவியிலிருந்து விலகும் நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாள் பிரதம மந்திரிகளுக்கு சிறப்புப் பாதுகாப்பு அளிக்க வகை செய்யும் அரசியல் சாசன திருத்த மசோதாவை கடந்த புதன்கிழமை லோக்சபாவில் சமர்ப்பித்திருந்தது.

## ஆட்பதிவுத் திணைக்களம்

# 8மாதங்களாக அ. அட்டை அனுப்பி வைக்கவில்லை

ஆட்பதிவுத் திணைக்களம் கடந்த எட்டு மாதங்களாக யாழ் மாவட்டத்திற்கு அடையாள அட்டைகளை அனுப்பி வைக்கவில்லை

ஆயிரக்கணக்கானவிண்ணப்பதாரிகளது அடையாள அட்டைகள் ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன இவற்றை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (க)

## யாழ்/பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

[முற்றிலும் பல்கலைக்கழக வசதிகளைக் கொண்ட நிறுவனம்]

**G.A.Q:-** LECTURES IN DAY TIME
LECTURES IN SAT. & SUN.

ஆரம்பம்: 14-09-1991 (காலை 8.00 மணி)

**1st. in COMMERCE**
LECTURES IN DAY TIME
LECTURES IN SAT. & SUN.

ஆரம்பம்:- 14-09-1991 (காலை 8.00மணி)

மு. குறிப்புகள்:-

(அ) பட்டப்படிப்புகளுக்கென தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களும் விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்து போதிக்கின்றனர்

(ஆ) நூலக வசதி மற்றும் வசதிகளைக்கொண்ட நிறுவனம்

(இ) G. A. Q. 1ST IN Com. Day time விரிவுரைகள் ஐந்து நாட்களும் நடைபெறும்.

(ஈ) ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு விரிவுரையாளரைக் கொண்டிருக்கும்

(உ) விக்னா கல்வி நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கான விரிவுரைகள்கீழ்க்காணும் முகவரியில் ஆரம்பமாகும்.

The College of Higher Studies
ANAIPANTHY, JAFFNA.
(ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமையில்)

(B.3076)



## தாதிய சேவை

அவசர கால தாதிய சேவையில் கடமையாற்றுவதற்கு எங்கள் நிறுவனத்தில் கல்வி கற்ற சகல உதவித் தாதிகளும் கடமைக்கு சமூகமளிக்கும் பொருட்டு 16-9-91 திங்கட் கிழமை பாடசாலையில் சமூகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

Dr. V. P. சுந்தரராஜன்
அதிபர்
சாயி மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(B/3113)


# ஈராக்கிய துருப்புக்களை அமெரி. உயிருடன்புதைத்தனர்

(வாஷிங்டன்)

வளைகுடாப்போரின்போது குவைத்துக்குள், ஈராக்கிய தற்காப்புப் பவடகளை முறித்துக் கொண்டு அமெரிக்கத் துருப்புக்கள் முன்னேறிய போது அவர்கள் ஈராக்கிய துருப்புகளை உயிருடன் புதைத்தார்கள் என்ற செய்திகளை அமெரிக்க பாதுகாப்புத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

குறைந்தது எண்ணாயிரம் ஈராக்கிய இராணுவத்தினர் அவர்களது ப துகாப்புக் குழிகளுக்குள் ட்றக்குகளாலும் மண் அகற்றி இயந்திரங்களினாலும் வேண்டுமென்றே உயிருடன் புதைக்கப்பட்டார்கள் என்று செய்தி ஏடு ஒன்று தெரிவித்திருந்தது.

இதனை உறுதிப்படுத்திய பாதுகாப்புத்துறை உயர் அதிகாரியொருவர் அந்த எண்ணிக்கையை மறுத்து அத்தகைய போர் உத்திகள் போர்பற்றிய ஜெனீவா கோட்பாட்டை மீறியது அல்ல என்று தெரிவித்தார்.

**அமெரிக்க இராணுவ**

## செலவீட்டைக் குறைக்க சோவியத் கோரிக்கை

(மொஸ்கோ)

கியூபாவிலுள்ள சோவியத் துருப்புக்கள் குறைக்கப்பட்டதற்கு ஏற்ப அமெரிக்காவும் தனது இராணுவச் செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும் என்று சோவியத் யூனியன் வாஷிங்டனை கேட்டுள்ளது.

மொஸ்கோவில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசிய பொரிஸ் பாங்கின் கியூபாவின் தென்கிழக்கு மூலையிலுள்ள அமெரிக்கப் படைவீரர்களை குறைக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

## 'தமிழீழ நோக்கு'

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ நோக்கு'' ஆய்வு சஞ்சிகையின் வெளியீட்டு விழா வரும் திங்கட்கிழமை 16ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பேராசிரியர் வி. ஆறுமுகம் தலைமை தாங்குவார். வெளியீட்டுரையை கலாநிதி இ. பாலசுந்தரமும், வாழ்த்துரையை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதித்தலைவர் கோ. மகேந்திரராசாவும், சிறப்புரைகளை துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் ஆகியோரும் ஆய்வுரையை அ. திருநாவுக்கரசுவும் நிகழ்த்துவர்.

## நினைவஞ்சலி

(கிளிநொச்சி)

ஆனையிறவில் வீரமரணமடைந்த லெப். கர்ணன் (தம்பிராசா பவனேஸ்வரன்) அவர்களின் 45ஆம் நாள் நினைவஞ்சலி இன்று கிளிநொச்சி புளியம் பொக்கணையில் அவர் இல்லத்தில் நடைபெறும்.

**இராணுவ**

மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இடபோரில் இரா

**மாமனிதர்**

பார்வைக்கு தினமும் காலை 9-00 மணி முதல் மாலை5-00 மணிவரை வைக்கப்படவுள்ளன. இவை கலைஞானி அவர்களின் தனிப்பட்ட சொந்த முயற்சியினால் சேகரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழகத்தின்**

புலிகளுக்குச் சார்பாகவும், ராஜீவ் காந்தி கொல்லப்பட்

**விமானக்**

விடாது கடந்த பதின்மூன்று தினங்களாக நடாத்தப்படும் தாக்குதல்களால் ஏற்பட்டுள்ள சேதம் மதிப்பிடமுடியாததாகும் என்றும் கூறப்படுகிறது. இத்தாக்குதலின் வெடிச்சத்தம்புதுக்குடியிருப்புரவரை கேட்கக் கூடியதாக இருக்கிறது.

**நாடக**

பிற்பகல் மூன்று மணிக்கு நாடகக் கல்லூரி பற்றியும், எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு சித்திர சிற்பக் கல்லூரி பற்றியும் கலந்துரையாடல் கோண்டாவிலில் நடைபெற உள்ளது.

**சபாநாயகரின்**

டுள்ளனர் என்றும் எஞ்சிய முப்பத்தைந்து பேர் யார் என்பது இன்னமும் இனம் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## டிசம்பர் 9 இல் க. பொ. த. (சா.) பரீட்சை

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட அனைத்து மாகாணங்களிலும் க. பொ. த (சாதாரணதரம்) 1991ஆம் ஆண்டுப் பரீட்சை டிசெம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இத்தகவலை பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

**பாராளு**

ஆராய்ந்து வருகின்றனர்.

இதுபற்றி கலைக்கப்பட்ட ஈரோஸ் அமைப்பின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான சங்கர் ராஜி அண்மையில் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் காலியாகி உள்ள பன்னிரண்டு ஆசனங்களையும் நிரப்புவதற்கு நாங்கள் விரும்புகின்றோம். ஆனால் சுயேட்சைக் குழுவைப் பொறுத்த வரையில் புதிய உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் குழுவுக்கு தலைமை தாங்கியவருக்கே உண்டு. அவருக்கு ஏதாவது நேரும் பட்சத்தில் நியமன அதிகாரம் யார் கையில் என்பது குறித்து எதுவித ஏற்பாடுகளும் அரசியல் சட்டத்தில் இல்லை. எனவே எதிர்காலம் குறித்து நிர்ணயிக்க தேர்தல் ஆணையாளரையும், ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனையும் அணுகினோம். சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதாகக் கூறினர். ஆனால் அது இன்னமும் பேச்சளவிலேயே உள்ளது எனக்கூறினார்.


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி.

15.09.1991 இல் நடாத்தப்படவிருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டிருக்கின்றது என்பதை அறிவிக்கின்றோம்.

(B/3113) சாயி மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

# 45-ம் நாள் நினைவாக...



வீரஜனனம்
15-07-1970

வீரமரணம்
01-08-1991

## வீரவேங்கை சுதன்
(இராசரத்தினம் ஜீவகுமார்)

கட்டவிழ்த்துக் கொண்டிருந்த
மொட்டொன்று...
தன் சுதந்திர மணங்கள்
சுவாசங்களைத் தொடமுன்பே
அன்னை பூமியை
முத்தமிடடுக் கொண்டது!

சுதன்...!
நீ முழுமை பெற முன்பே
டிவாகிப் போனவன்
என பலர் முணுமுணுக்கக் கேட்கிறோம்!
உண்மையில்
இங்கே தான்... நீ
உன் மக்களிடம்
புதிதாய் பிறப்பெடுத்திருப்பதை
புரிந்து கொள்கிறோம்.

– குடும்பத்தினரும் நண்பர்களும்.

(B/3107)

**இராணுவ**
மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன: ஆனால் இடபோரில் இராணுவத் தரப்பிற்கு ஏற்பட்ட இழப்புக்கள் இதைவிட அதிகமென சுயாதீனமான செய்திகள் தெரிவிக்கின்றன.

**நித்திகைக்குள**
★ பகீர் / பகீரதன் (பாக்கியநாதன் அன்ரனிநிமால் இலவாலை, யாழ்ப்பாணம்)
★ வசி (அண்ணாமலை செல்லயோகன் 3ஆம் வட்டாரம், முள்ளியவளை)
★ பிரபு (தருமலிங்கம் ராஜ்குமார், முள்ளியவளை முல்லைத்தீவு)
★ ரகுநாத் (ஆறுமுகம் பேரின்பராஜா, தண்ணீரூற்று, முள்ளியவளை)
★ மதி (மாரிமுத்து ஜீவக்குமார், வசந்தபுரம், ஒட்டிசுட்டான்)
★ மாறன் (துரைரட்ணம் ராஜரகுநாத், கைதடி, யாழ்ப்பாணம்)
★ வினோத் (அமிர்தநாதன்) (பாலசுந்தரம் குமார், தண்ணீரூற்று, முள்ளியவளை)
★ நிறஞ்சன் (கனகசபை இராஜேந்திரன், இரணபாலை புதுக்குடியிருப்பு)

டவை என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழகத்தில்**
புலிகளுக்குச் சார்பாகவும், ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதை நியாயப்படுத்தியும் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் பற்றி உறுப்பினர்களான சிங்காரமும் தண்டாயுதபாணியும் அரசின் கவனத்திற்கு கொண்டுவந்தனர். இதற்குப் பிரதமர் பதிலளித்துப் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்,

புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டப் பொலிஸ் அதிகாரிகளும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் பணிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

இத்தகையோர்மீது மாநிலம் தழுவிய முறையில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மதுரை மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் புலிகளுக்கு ஆதரவாக கூட்டம் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். இவர்கள்மீது சட்டப்படி மேலும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

## உருக்கமான வேண்டுகோள்!

10-09-91 புதன் மாலை 7·00 மணியளவில் கண்டிக்குளத்திற்கும் றெட்பானா சந்திக்கும் (பரந்தன் முல்லைத்தீவு பாதை) இடையில் ஒரு கறுப்பு நிற கைபாக் (Hand Bag) தவறவிடப்பட்டுள்ளது அதனுள் முக்கிய தஸ்தாவேஜுக்கள் உள்ளன. கண்டெடுத்தவர்கள் இப்பத்திரிகைக் காரியாலயத்திலோ அல்லது பால விநாயகர் ஸ்ரோர்ஸ் - கிளிநொச்சி என்ற முகவரியிலோ சேர்க்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (B/3120)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "சமநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டிருக்கின்றது என்பதை அறிவிக்கின்றோம்.

14.09.1991

எஸ். சிவராஜலிங்கம்
செயலாளர்

(R-1745)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
20.8.1975

இறப்பு
01.8.1991

## வீரவேங்கை அலெக்ஸ்
பூபாலசிங்கம் பவளகாந்தன் (கண்ணன்)

இலட்சியம் ஒன்றே என்று
ஏந்தினீர் துப்பாக்கியினை
ஊணின்றி உறக்கமின்றி
உடல் சோரும் போதிலெல்லாம்
உளம் சோரா நிற்கும் வீரர்
நிச்சயம் ஒருநாள் உங்கள்
நீண்டநாள் கனவு வெல்லும்.

கச்சார்வெளி,
பளை.

அப்பா, அம்மா, அண்ணன்மார்,
தம்பிமார், அக்காமார், தங்கை,
அண்ணிமார்.

(R-1725)